முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கௌதமர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

22.03.2019, வெள்ளிக்கிழமை

1. **ஆறுமுக சக்தியே அரங்கா வாழ்க**
**அறம் காத்து வரும் அரசா வாழ்க**
**மாறுதலை செய்ய வந்தநல்**
**மாதவசியே ஞான தேசிகா**

2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசியை
ஆசிபட **விளம்பி சேலின் திங்கள்**
**அறிவிக்க அட்டமதிகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 8ம் நாள் 22.03.2019, வெள்ளிக்கிழமை)**

3. வாரமதில் கௌதமர் யானும்
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
சோரமில்லா வாழ்வு நலம் காண
சுத்தநெறி கொள்கை ஏற்று வர

4. வருகவே அரங்கன் தொடர்பால்
வருகவே ஞான வழிகாட்டலால்
முருகப்பெருமான் தயவும் கிட்டி
முழுமை ஞான பலமும் அடைவர்

5. அடைவரே அரங்கனிடம் ஆசி
அருள் தீட்சை பெறும் மக்கள்
தடையிலா தேட்டு தனவளமும்
தனிப்பெறும் சக்தி பலமும் கண்டு

6. கண்டுமே மேலவர் துணைபட
காணவரும் அனைத்து மக்களுக்கும்
தொண்டு மனப்பான்மை பெருகி
தெய்வீக நிலை கண்டு சிறப்பர்

7. சிறப்பு தரும் ஞானயுக வாழ்வுக்கு
செப்பிடுவேன் அறம் எனும் சக்தியை
மறுப்பிலா உலக மக்கள் ஏற்று
மாதரும வழியில் உதவி வர

8. வருகவே அன்னதான சேவையை
வையகமெங்கும் பரப்பியே
முருகா என வேண்டியே
முழுமை பெற்ற ஞானிகள் அருளும்

9. அருளும் முழுமதி பூசைதோறும்
அணுகி அரங்க ஞானியிடம்
அருளாசி தீட்சை பெற்று
ஆசானே என சரணடைவு காண

10. காணவே முழுமதி பூசை பலனாக
கந்தவேலன் பூரண அருள் கிட்டி
ஞானதேசிகன் தீட்சை வழி
ஞானியாகவே ஆவர் வரும் மக்கள்

11. மக்களின் சக்தியை ஞானசக்தியாக
மாதவ மாதரும சக்தியாக
தேக்கமிலா மாற்றும் ஞானியே
தேசிகனே உன்னால் உலகம் மாறும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் கௌதமர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

முருகப்பெருமானின் சக்தி வடிவமே அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க. இவ்வுலகினில் அறத்தினை காத்து வருகின்ற அறத்தின் தலைவனே ஞானஅரசே அரங்கா வாழ்க வாழ்க. உலகினில் மாபெரும் மாற்றங்களை செய்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட நல்மாதவசியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க. அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 8ம் நாள் 22.03.2019, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே கௌதமர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கௌதமமுனிவர்.

உலக மக்களே குற்றமற்ற வீண்போகாத நல்வாழ்வினை வாழ்ந்திட வேண்டுமாயின் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் தூயநெறியினை ஏற்று கடைப்பிடித்திட வேண்டும். உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவஉணவினை மேற்கொண்டு தினம்தினம் தவறாமல் முருகப்பெருமானை வழிபாடுகள் செய்வதுடன் பசித்த ஏழைகளுக்கு இயன்ற அளவு பசியாற்றுவித்தும் வருதல் வேண்டும். இவ்விதமே தொடர்ந்து செயல்பட உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தொடர்பினை பெறுவீர்கள். ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தொடர்பினை பெற்றிட்ட அவரெல்லாம் அரங்கமகா ஞானகுருவின் வழிகாட்டலில் அரங்கபெருமானின் அருளாசியைப் பெறுவதுடன் ஆறுமுகப்பெருமானின் தயவையும் பெற்று முழுமையான ஞானபலத்தினை பெறுவீர்கள்.

ஆறுமுக அரங்கமகானை குருவாய் ஏற்று பயபக்தியுடன் திருவடி பணிந்து ஆசி தீட்சை உபதேசங்களை அடைந்து பின்பற்றும் மக்களுக்கு தடைகள் ஏதும் இல்லாமல் நல்ல வருவாயும், பொருள் சேர்க்கையும் உண்டாகி தனிப்பெரும் சக்திகளும் பெருகி அவரவருள்ளும் சுயநலம் குறைந்து தொண்டுள்ளம்பட பொதுநலம் பெருகிடும். உலக உயிர்களுக்கு அவரெல்லாம் ஆறுமுகப்பெருமான் அரங்கனின் பின்சென்று தொண்டுகளைச் செய்து தெய்வீக நிலையை அடைந்து சிறப்பான வாழ்வினை அமைதிபட வாழ்வார்கள்.

சகல சிறப்புகளையும் தந்தருளும் ஞானயுக வாழ்விற்கு உலகோர் வந்திட வேண்டுமாயின் சர்வ வல்லமைமிக்க அறம் எனும் தர்மசக்தியை மறுப்பின்றி மக்கள் ஏற்று தர்மங்களை தாராளமாய் செய்து அரங்கன் ஆற்றும் தானதருமப் பணிகளுக்கு உதவிகள் செய்து வர வேண்டும். அரங்கன் ஆற்றும்

அன்னதான தொண்டினை அவரவரும் தமது கடமையாக ஏற்று செய்வதுடன் உலக மக்களும் செய்திட தூண்டி அரங்கனின் அன்னதான பணிகளை உலகமெங்கும் பரப்பிட வேண்டும். உலக மக்கள் எல்லாம் முழுமுதற் கடவுளும், ஞானத்தின் தலைவனும் தர்மத்தலைவனுமாகிய முருகப்பெருமானின் திருவடிகளைப் பற்றி பூஜித்திடுமாறு உலகோரிடத்து அரங்கன் கொள்கைகளை பரப்பி வர வேண்டும்.

உலக நலன் கருதி ஆறுமுக அரங்கமகான் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்திலே நடத்துகின்ற சித்தர்கள் சிறப்பு வழிபாடுகளிலே கலந்து, முருகா, முருகா, முருகா என மனம் உருகி முருகப்பெருமானையும் ஞானிகளையும் வழிபாடுகள் செய்து ஏழாம் படை வீட்டு நாயகன் முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடம் அருளாசிகளையும் தீட்சை உபதேசங்களையும் பெற்று ஆசான் அரங்கனின் திருவடிகளே கதியென முழுச்சரணாகதி அடைந்துவிட வேண்டும்.

பௌர்ணமி பூசை கலந்து அரங்கன் தீட்சை உபதேசம் அடைந்து அரங்கன் திருவடியே கதியென சரணாகதியினை அடைந்துவிட அவர்க்கு முருகப்பெருமானின் பூரண அருளும் ஆசியும் கிடைத்து ஞானதேசிகன் அரங்கனின் தீட்சை பலனால் ஞானிகளாக ஆகும் வாய்ப்பினை பெறுவார்கள்.

உத்தம மகா ஞானியே ஆறுமுக அரங்கா உம்மை அபயம் என நாடி வந்த மக்கள் சக்தியை ஞான சக்தியாக மாற்றிடும் மகா ஞானியே மாதவ சக்தியை மாதரும சக்தியாக தடையின்றி மாற்றி உலகின் தருமபலத்தை உயர்த்தும் மகா ஞானியே அரங்கமகா தேசிகா உம்மால் இந்த உலகம் உறுதியாக மாற்றம் அடைந்து ஞானயுகமாக ஆகிடுமப்பா என கூறுகிறார் மகான் கௌதமமுனிவர்.

–சுபம்–